# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டம்

---

[*2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024, யூன் மாதம் 20 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 66.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டம்

*[2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.- ஓ. 66/2023*

**பொதுத் தனிசைக் கடனாகப்பெறுவதற்கும், வழங்குவதற்கும், சேவையளிப்பதற்குமான அதிகாரவளிப்புட்பட, பொதுத் தனிசு முகாமைத்துவத்துக்காக ஏற்பாடுசெய்வதற்கும், அத்துடன் உத்தரவாதங்களை வழங்குதலும், கடனாகப் பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுத்தலும், வழங்குநரின் கடன் மற்றும் நிதிக்குத்தகை உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதலும்; பொதுத் தனிசு முகாமைத்துவ அலுவலகத்தைத் தாபிப்பதற்காகவும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமான தொரு சட்டம்.**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

**1.** *(1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*(2) இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இச்சட்டத்தில் ''நியமிக்கப்பட்ட தேதி'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறானதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

*(3) சட்டமூலமானது எத்தேதியன்று பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்றதோ அத்தேதியன்று இப்பிரிவின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

*(4) நியமிக்கப்பட்ட தேதியானது, இப்பிரிவின் ஏற்பாடுகள் எத்தேதியன்று நடைமுறைக்கு வருகின்றனவோ அத்தேதியிலிருந்து ஆறுமாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பிந்தாத ஒரு தேதியாதல் வேண்டும்.*

இச்சட்டத்தின் ஏற்புடைமை

**2.** இச்சட்டம் பின்வரும் உருவகங்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் விசேட செலவிடும் அலகுகள் ;

(ஆ) எந்த நியதிச்சட்டமுறையான நிதியங்கள் மற்றும் நம்பிக்கைப்பொறுப்புக்களுக்குப் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் பொது நிதி குறித்தொதுக்கப் படுகின்றதோ அந்த நியதிச்சட்டமுறையான நிதியங் களும், நம்பிக்கைப்பொறுப்புக்களும்;

(இ) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்;

(ஈ) மாகாணசபைகள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாணசபைகளின்கீழ் வருகின்ற வேறு நிறுவனங்கள், மற்றும் உள்ளூரதிகாரசபைகள்; அத்துடன்

(உ) வேறேதேனும் உருவகம்.

பொதுத் தனிசு முகாமைத்துவக் குறிக்கோள்கள்

**3.** பொதுத் தனிசு முகாமைத்துவம் என்பது, பின்வரும் குறிக்கோள்களுடன் பொதுத் தனிசை முகாமை செய்வதற்காக ஒரு நடுத்தரக்கால மூலோபாயத்திலிருந்து ஒரு நீண்டகால மூலோ பாயத்தைத் தாபித்து நிறைவேற்றும் செய்முறையாகவுள்ளது:-

(அ) ஓர் உரிய நேரத்திலான அடிப்படையின்மீது நிதியளித் தல் தேவைகளையும் தனிசுக் கொடுப்பனவுக் கடப் பாடுகளையும் எதிர்கொள்ளுதல்;

(ஆ) புத்திசாதுரியமான அளவிலான ஆபத்துடன் ஒத்தி ருக்கின்றவாறு, நடுத்தரக்காலத்திலிருந்து நீண்ட காலம்வரை இயன்றளவு மிகக்குறைந்த ஆகு செலவுகளில் கடன்பெறுதல்; அத்துடன்

(இ) உள்நாட்டுத் தனிசுப் பிணையங்கள் சந்தையின் அபிவிருத்தியை மேம்படுத்துதல்.

பாகம் I

## பொதுத் தனிசு முகாமைத்துவ அலுவலகத்தைத் தாபித்தல்

இலங்கைப் பொதுத் தனிசு முகாமைத்துவ அலுவலகத்தைத் தாபித்தல்

**4.** (இதனகத்துப்பின்னர், "அலுவலகம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) பொதுத் தனிசு முகாமைத்துவ அலுவலகம் எனவழைக்கப்படுவதுமான அலுவலகமொன்று நிதியமைச்சினுள் தாபிக்கப்படுதல் வேண்டும்; அது பின்வருவனவற்றுக்காகப் பொறுப்பாதல் வேண்டும்:-

(அ) அரசாங்கத்தின் தனிசை முகாமைசெய்தல்;

(ஆ) கடன் உத்தரவாதங்களை வழங்குதலும் முகாமை செய்தலும்;

(இ) கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுக்கும் தொழிற்பாடுகளை முகாமைசெய்தல்; அத்துடன்

(ஈ) பொதுத் தனிசைப் பதிதலும் அறிக்கையிடுதலும்.

அலுவலகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி

**5.** (1) அமைச்சரவையினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் தலைமையதிபதியொருவர் இருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி அலுவலகத்தின் தலைவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அலுவலகத்தின் ஒட்டுமொத்தத் தொழிற்பாடுகளுக்குப் பொறுப்பாதலும் வேண்டும்.

(3) ஊதியமுட்பட அலுவலகத்தின் எல்லா ஊழியர்களுக்குமான தொழில் நியதிநிபந்தனைகள், காலத்துக்குக்காலம் ஏற்புடையன வாகக்கூடியவாறான நிலவுகின்ற அரசாங்க ஒழுங்குவிதிகளினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

அலுவலகத்தின் தத்துவங்களும் பணிகளும்

**6.** அலுவலகமானது, 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்:-

(அ) பின்வருவனவற்றைத் தயாரித்தலும் வெளியிடுதலும்:-

(i) நடுத்தரக் காலத் தனிசு முகாமைத்துவ மூலோபாயம்;

(ii) வருடாந்தக் கடன்பெறும் திட்டம்; அத்துடன்

(iii) அரசாங்கப் பிணையங்களை வழங்குவதற்கான ஏலவிற்பனை நாட்காட்டிகள்;

(ஆ) அரசாங்கத்தின் நிதிசார் நியதிநிபந்தனைகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்பெறுகைகள், வேறு கடன் ஒழுங்கேற்பாடுகள் மற்றும் தனிசு முகாமைத் துவச் செயற்பாடுகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்துதல்:

ஆயின், இருபுடை மற்றும் பல்புடை முகவராண் மைகளிலிருந்தான அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளும், திறைசேரியின் வெளிநாட்டு மூலவளங்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக வுள்ள திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும்;

(இ) நிதிச்சந்தைகளுக்கான அணுகுகையை எய்துவதற்கும் பேணுவதற்கும் அவசியமானவாறான தொடர்புகளைப் பேணுதல்;

(ஈ) திறைசேரியின் திறைசேரித் தொழிற்பாடுகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்துடன் பணஓட்ட முகாமைத்துவம் தொடர்பாகத் தனிசுத் தொழிற்பாடுகளை ஒருங்கிணைத்தல்;

(உ) தனிசுடன் தொடர்புபட்ட பொறுப்பு முகாமைத்துவத் தொழிற்பாடுகளைத் தயாரித்தலும் நிறைவேற்று தலும்;

(ஊ) கடன் ஆபத்தை மதிப்பீடுசெய்தலும் கடன் உத்தரவாதங்களின் ஆபத்துத் தணிப்புப் பொறிமுறை பற்றிய மதியுரையும் மற்றும் கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுத்தல் தொழிற்பாடுகளும்;

(எ) இச்சட்டத்துக்கிணங்கப் பொதுத் தனிசு, கடன் உத்தரவாதங்கள், கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன் கொடுத்தல், வழங்குநரின் கடன் மற்றும் நிதிக்குத்தகை என்பனவற்றைப் பதிதலும், அறிக்கையிடுதலும், பரப்புதலும் மற்றும் வெளியிடுதலும்;

(ஏ) இச்சட்டத்துக்கிணங்க அரசாங்கத் தனிசின் உரிய நேரத்திலான சேவையளிப்பு;

(ஐ) அரசாங்கத்தின் தற்போதைய மற்றும் எதிர்வுகூறப்பட்ட தனிசு ஆகிய இரண்டினதும் அடிப்படையின் மீது தனிசுச் சேவை எதிர்வுகூறல்களைத் தயாரித்தலும்; அத்துடன்

(ஒ) 3 ஆம் பிரிவின் கீழான குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் அமைச்சர் குறித்தளிக்கக்கூடிய வேறேதேனும் பணி.

**7.** அலுவலகத்தின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிதலிலும் பின்பற்றப்படவேண்டிய கொள்கை தொடர்பாக, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராதவாறான அத்தகைய வழிகாட்டுநெறிகளை அல்லது பணிப்புகளை அமைச்சர் அலுவலகத்துக்கு எழுத்தில் வழங்கலாம். வழிகாட்டுநெறிகளையும் பணிப்புகளையும் வழங்குவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவங்கள்

பாகம் II

## பொதுத் தனிசு ஒருங்கிணைத்தற் குழு

**8.** (1) கொள்கை மட்டத்தில் ஒருங்கிணைப்பதற்கு (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) அமைச்சரினால் நியமிக்கப்பட்டதுமான பொதுத் தனிசு ஒருங்கிணைத்தற் குழுவொன்று இருத்தல் வேண்டும்; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:- பொதுத் தனிசு ஒருங்கிணைத்தற் குழுவைத் தாபித்தல்

(அ) தவிசாளராகச் செயலாற்றவேண்டிய திறைசேரிப் பிரதிச் செயலாளர்;

(ஆ) திறைசேரியின் திறைசேரித் தொழிற்பாடுகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(இ) திறைசேரியின் அரசிறைக் கொள்கை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக வுள்ள திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஈ) திறைசேரியின் வெளிநாட்டு மூலவளங்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(உ) திறைசேரியின் தேசிய வரவுசெலவுத் திட்டம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஊ) திறைசேரியின் பகிரங்கத் தொழில்முயற்சிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(எ) மத்திய வங்கியின் ஆளுநரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களும் பணிப்பாளர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ளவர் களுமான மத்திய வங்கியின் இரு அலுவலர்கள்; அத்துடன்

(ஏ) அலுவலகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி.

(2) அலுவலகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி, குழுவின் செயலாளராகவும் கூட்டுநராகவும் இருப்பதற்கு அலுவலகத்தின் சிரேட்ட அலுவலரொருவரைப் பெயர்குறித்துநியமித்தல் வேண்டும்.

(3) குழுவானது ஒவ்வொரு மாதமும் ஆகக்குறைந்தது ஒரு தடவையேனும் கூடுதல் வேண்டும்.

குழுவின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

**9.** குழுவின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பாரியப் பொருளாதாரக் கொள்கைகளுடன் தனிசு முகாமைத்துவ மூலோபாயம் ஒத்திருக்கின்றமையை உறுதிப்படுத்தி, அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட தனிசு முகாமைத்துவ மூலோபாயத்தையும் அதன்

நாளதுவரையாக்கல்களையும் பரிசீலனைசெய்து அவற்றின்மீது அபிப்பிராயத்தைத் தெரிவித்தலும்;

(ஆ) வருடாந்தக் கடன்பெறும் திட்டம் மற்றும் அதன் செயல்நிறைவேற்றத்தைப் பரிசீலனைசெய்து அதன்மீது அபிப்பிராயத்தைத் தெரிவித்தல்;

(இ) உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சந்தை நிலைமைகளைப் பரிசீலனைசெய்து பொதுத் தனிசுடன் இணைந்த ஆபத்தின்மீது விதப்புரைகளையும் அலுவலகமுறையான அபிவிருத்தி உதவியின்மீது சந்தையிலான வாய்ப்புக்களையும் வழங்குதல்; அத்துடன்

(ஈ) 3 ஆம் பிரிவின்கீழான குறிக்கோள்களை எய்தும் நோக்கங்களுக்காக அதற்குக் குறித்தளிக்கப் படக்கூடியவாறான அத்தகைய வேறு பணிகளைப் புரிதல்.

**10.** (1) குழுவின் கூட்டநடப்பெண், ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். குழுவின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்

(2) குழுவின் கூட்டமொன்று பின்வருமாறு நடாத்தப்படலாம்; ஒன்றில்–

(அ) கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் ஒன்றுகூடியுள்ளவர்களும் கூட்டநடப்பெண் ஒன்றாக அமைகின்றவர்களுமான எண்ணிக்கையினரான உறுப்பினர்களினால்; அல்லது

(ஆ) கட்புல-செவிப்புலத் தொடர்பாடல் வழிவகைகளினால்; இதன்மூலம் பங்குபற்றுகின்றவர்களும் கூட்டநடப்பெண் ஒன்றாக அமைகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்டம் நிகழும்போது ஒவ்வொரு பங்குபற்றும் உறுப்பினரையும் உடனிகழ்வாகக் காணமுடியும் மற்றும் கேட்கமுடியும்.

பாகம் III

**அரசாங்கக் கடன்பெறுகையும் தனிசு முகாமைத்துவமும்**

*தனிசு முகாமைத்துவ மூலோபாயம்*

**11.** (1) மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அரசாங்கத்தின் தனிசை முகாமைசெய்வதற்காக (இதனகத்துப்பின்னர் "மூலோபாயம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நடுத்தரக்காலத் தனிசு முகாமைத்துவ மூலோபாயமொன்று, வருடாந்தம் ஐந்தாண்டுச் சுழற்சியைக்கொண்ட எல்லையின்மீது அலுவலகத்தினால் வகுத்தமைக்கப்பட்டு நாளதுவரையாக்கப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய மூலோபாயம் அமைச்சரினால் பரிசீலனை செய்யப்பட்டு அமைச்சரவையின் இறுதி அங்கீகாரத்துக்காக அதற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அமைச்சரவையின் அங்கீகாரம் அளிக்கப்படுமுன்னர் வரைவு மூலோபாயத்தின்மீது எழுத்திலான கருத்துரைகளை வழங்குவதற்கான வாய்ப்பொன்று மத்திய வங்கிக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) அங்கீகரிக்கப்பட்ட மூலோபாயம் நடுத்தரக்கால அரசிறைக் கட்டுக்கோப்புடன் வரிசையாக்கப்பட்டு நிதியமைச்சினதும் அலுவலகத்தினதும் அலுவலகமுறையான வலைத்தளங்களில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் மூலோபாயமானது எந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்படுகின்றதோ அந்த ஆண்டினது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்புக்குப் பிந்தாமல், வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஆவணத்தின் இணைந்த ஆவணமொன்றாகப் பாராளுமன்றத்தில் இடப்படுதலும் வேண்டும்.

(4) மூன்றாம் பிரிவின்கீழான குறிக்கோள்களை எய்துகின்ற நோக்கங்களுக்காக, (1) ஆம் உட்பிரிவின்கீழ் சுழற்சிமுறையான ஐந்தாண்டு எல்லையின்மீது வருடாந்தம் வகுத்தமைக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்ட மூலோபாயம், அடுத்துவரும் நிதியாண்டாகவும் அடுத்துறும் நான்கு நிதியாண்டுகளாகவும் அமைவதுடன் பின்வருவனவற்றைக் கணக்கிற்கெடுத்தலும் வேண்டும்:-

(அ) தற்போதைய பொதுத் தனிசு அலுவல்துறையிலும் நிலுவையாகவுள்ள மூலாதாரப் பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களிலும் உள்ளடக்கப்பட்ட ஆகு செலவும் ஆபத்தும்;

(ஆ) எதிர்காலக் கடன்பெறுகைத் தேவைப்பாடுகள்;

(இ) நடுத்தரக்கால அரசிறைக் கட்டுக்கோப்பு;

(ஈ) சந்தை நிலைமைகள்; அத்துடன்

(உ) மூலோபாயத்தைத் தயாரிப்பதற்காக இயைபானவையாக இருக்கக்கூடியவாறான அத்தகைய வேறு காரணிகள்.

(5) அங்கீகரிக்கப்பட்ட மூலோபாயம் அலுவலகத்தினால் ஆகக்குறைந்தது வருடாந்தமேனும் பரிசீலனைசெய்யப்பட்டு நாளதுவரையாக்கப்படுதல் வேண்டும். நாளதுவரையாக்கப்பட்ட மூலோபாயம் அங்கீகாரத்துக்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன்பின்னர் நிதியமைச்சினதும் அலுவலகத்தினதும் அலுவலகமுறையான வலைத்தளங்களில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(6) எல்லாக் கடன்பெறுகைகளும் வேறு தனிசு முகாமைத்துவத் தொழிற்பாடுகளும் மூலோபாயத்துடன் இசையவிருத்தல் வேண்டும்.

**12.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணயங்களில் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே தனிசுப் பிணையங்களைக் கடனாகப்பெறுவதற்கும் வழங்குவதற்கும் அமைச்சர் தனி அதிகாரத்தைக் கொண்டுள்ளார். கடன்பெறுகை அதிகாரவளிப்பு

(2) இலங்கை அரசாங்கத்தின் தனிசு, திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

**13.** (1) அரசாங்கம் எந்நோக்கங்களுக்காகக் கடன்பெறலாமோ அந்நோக்கங்கள் பின்வருமாறாகும்:- கடன்பெறுகை நோக்கங்கள்

(அ) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த அரசாங்க வரவுசெலவுத்திட்டத்திலான ஏதேனும் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கும்;

(ஆ) அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவொரு மட்டத்தில் அல்லது ஒரு வரம்பில் திரவத்தன்மை எல்லை யொன்றைக் கட்டியெழுப்புவதற்கும் பேணுவதற்கும் உட்பட, காசோட்டத்தை முகாமைசெய்வதற்கும்;

(இ) மாகாணசபைகளுக்கும், உள்ளூரதிகாரசபைகளுக்கும், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடிய வாறான வேறேதேனும் உருவகத்துக்கும் நிதிகளைக் கடனாகக்கொடுப்பதற்கும்;

(ஈ) அழைக்கப்பட்ட அரசாங்க உத்தரவாதங்களின்கீழான கடப்பாடுகளுக்கு மதிப்பளிப்பதற்கும்;

(உ) கடனொன்று அல்லது வரவொன்று முதிர்வடையும் தேதிக்குமுன்னர் அதனை மீள்கொடுப்பனவு செய்தலுட்பட, அரசாங்கத்தின் நிலுவையாகவுள்ள தனிசுக்கு மீளநிதியளிப்பதற்கும் அரசாங்கத் தனிசுப் பிணையங்களை மீளக்கொள்வனவு செய்வதற்கும்;

(ஊ) பொது நிதிசார் முகாமைத்துவத்துக்காக இயைபான சட்டவாக்கத்தைப் பின்பற்றி அல்லது அரசியலமைப் பின் 151 ஆம் உறுப்புரையின்கீழான எதிர்பாராச் செலவு நிதியத்தினூடாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக வருடாந்த வரவுசெலவுத்திட்டத்துக்கு ஆண்டினுள்ளான சீராக்குதல்களைச் செய்வதற்கு ஒரு கணக்கிலிருந்து இன்னொன்றுக்குப் பணத்தைக் கைமாற்றும் நடவடிக்கைமுறைகளினூடாக அல்லது வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கிலிருந்தான அல்லது வேறு ஒத்த பொறிமுறைகளிலிருந்தான குறித்தொதுக்க லொன்றினூடாக மேலதிகச் செலவினத்துக்கு நிதி யளிக்கமுடியாத விடயங்களில், பேரழிவுசார் அவசர காலநிலைமையொன்றினால் ஏற்படுத்தப்பட்ட

எதிர்பாராச் சூழ்நிலைகளின் விளைவுகளுக்கு உடனடியாகப் பதிலிறுப்பதற்கும்;

(எ) அரசியலமைப்பின் 150 ஆம் உறுப்புரையின் (3) ஆம், (4) ஆம் பந்திகளின்கீழ் எழக்கூடிய ஏதேனும் செலவினத்துக்கு நிதியளிப்பதற்கும்;

(ஏ) இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணய ஒதுக்குகளை மீளநிரப்புவதன்மூலம் அதன் கொடுப்பனவுகளின் மீதிக்கு ஆதரவளிப்பதற்கும்; அத்துடன்

(ஐ) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் நோக்கத்துக்காகவும்.

(2) கடன்பெறுகையானது (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் உள்ளவிடத்து, அமைச்சர், செயல்முறைக்குகந்தவரை விரைவாக ஆனால் அத்தகைய கடன்பெறுகை முடிவுற்றபின்னர் பதினைந்து வேலைநாட்களுக்குப் பிந்தாமல், கடன்பெறுகை பற்றிய நியதிநிபந்தனைகளைப் பாராளுமன்றத்துக்குத் தெரிவித்தல் வேண்டும்.

பணவகையான கொள்கைக் குறிக் கோள்களை நடை முறைப்படுத்து வதற்காக அரசாங்கத் தனிசுப் பிணையங்களின் வழங்குகை

**14**. (1) மத்திய வங்கியின் கோரிக்கையின்பேரில், அரசாங்கமானது, பணவகையான கொள்கைக் குறிக்கோள்களின் நடைமுறைப்படுத்துகைக்கு ஆதரவளிக்கின்ற தனி நோக்கத்துக்காகத் தனிசுப் பிணையங்களை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சந்தைப் பங்குபற்றுநர்களுக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் தனிசுப் பிணையங்கள் வழங்கப்படுமிடத்து, தனிசுப் பிணையங்களின் வழங்குகையிலிருந்தான வரும்படிகள், மத்திய வங்கியின் தனிப்படுத்தப்பட்ட கணக்கொன்றில் வைப்பிலிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தனிசுப் பிணையங்களை மீட்பதற்குப் புறநீங்கலாகப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

(3) அத்தகைய தனிசுப் பிணையங்களின் வழங்குகையிலிருந்து விளைகின்ற அரசாங்கத்துக்கான ஏதேனும் ஆகுசெலவு மத்திய வங்கியினால் முழுமையாக மீளளிக்கப்படுதல் வேண்டும்.

*(4)* இவ்வழங்குகைகள், எவையேனும் கடன்பெறும் எல்லைகளுக்கு அமைந்தனவாதலாகாதென்பதுடன் அவற்றின் நிலுவையாகவுள்ள பெறுமதிகள், தனிசுக் கையிருப்புக்களில் பதியப்பட்டு *25* ஆம் பிரிவின்கீழான வருடாந்த அறிக்கையில் தனிவேறான விடயமொன்றாக அறிக்கையிடப்படுதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் பிணையங்களின் வழங்குகை தொடர்பான பொறுப்புக்களும் நடவடிக்கைமுறையும், அரசாங்கத்தின் சார்பில் அமைச்சருக்கும் மத்திய வங்கிக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றின்கீழ் விதிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் *2023* ஆம் ஆண்டின் *16* ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

வருடாந்தக் கடன்பெறுகைத் திட்டம்

**15.** *(1)* கொடுக்கப்பட்ட ஏதேனுமாண்டிற்காக ஒதுக்கீட்டுச் சட்டத்துக்கிணங்கக் கூட்டுமொத்தக் கடன்பெறுகைத் தேவைப் பாட்டை எதிர்கொள்வதற்கு (இச்சட்டத்தில் "கடன்பெறுகைத் திட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) ஒவ்வொரு நிதியாண்டுக் கானதுமான கடன்பெறுகைத் திட்டமொன்றை அலுவலகமானது தயாரித்தல் வேண்டும். அத்தகைய கடன்பெறுகைத் திட்டம் ஆகக்குறைந்தது அரையாண்டுக்கொருதடவையேனும் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

*(2)* கடன்பெறுகைத் திட்டமானது, அரசாங்கத்துக்காகத் தீர்மானிக்கப்பட்ட மூலோபாயத்தையும், வருடாந்த முழுமொத்தக் கடன்பெறுகை உச்சவரம்பையும், பணஓட்ட எதிர்வுகூறலையும் கணக்குக்கெடுத்தல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவற்றை உள்ளடக்குதலும் வேண்டும்:-

(அ) ஆண்டின்போது திட்டமிடப்பட்ட கடன்பெறுகைகளும் மற்றும் வேறு தனிசு முகாமைத்துவத் தொழிற்பாடுகளும்;

(ஆ) பயன்படுத்தப்படவேண்டிய தற்காலிகச் சாதனங்களும் கடன்பெறுகை மூலங்களும்; அத்துடன்

(இ) இத்தொழிற்பாடுகளின் சுட்டிக்காட்டுகைசார் நேரக் குறிப்பு.

(3) கடன்பெறுகைத் திட்டமும் அதன் நாளதுவரையாக்கல்களும், திறைசேரியின் இயைபான திணைக்களங்களினதும் திறைசேரிச் செயலாளரினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறாக இயைபான அரசாங்க முகவராண்மைகளினதும் கலந்தாலோசனையுடன் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(4) அமைச்சர், கடன்பெறுகைத் திட்டத்தை, வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஆவணத்தின் இணைந்த ஆவணமொன்றாக, ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்புக்குப் பிந்தாமல் பாராளுமன்றத்தில் இடுதல் வேண்டுமென்பதுடன் கடன்பெறுகைத் திட்டம் எவ்வாண்டுக்காகத் தயாரிக்கப்படுகின்றதோ அவ் வாண்டுக்கு முற்போந்த நிதியாண்டின் முடிவில் கடன்பெறுகைத் திட்டத்தின் தனிவேறான வெளியீட்டுக்காக ஒழுங்கேற்பாடு செய்தலும் வேண்டும். நாளதுவரையாக்கப்பட்ட கடன்பெறுகைத் திட்டம் ஏதேனுமிருப்பின் அது, அமைச்சரவைக்கு அதன் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் நிதியமைச்சினதும் அலுவலகத்தினதும் அலுவலகமுறையான வலைத்தளங்களில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

*உள்நாட்டுச் சந்தையில் அரசாங்கத் தனிசுப் பிணையங்களின் வழங்குகை*

**16.** (1) அலுவலகத்தினால் உள்நாட்டுச் சந்தையில் அரசாங்கத் தனிசுப் பிணையங்களின் வழங்குகையானது, ஒன்றில் ஏலவிற்பனை நாட்காட்டிக்கு அல்லது வேறேதேனும் சந்தை அடிப்படையிலான பொறிமுறைக்கிணங்க ஏலவிற்பனை என்ற வகையாகவிருத்தல் வேண்டும்.

(2) ஏலவிற்பனை நாட்காட்டியானது, ஏலவிற்பனை நாட்காட்டியின்கீழ் திட்டமிடப்பட்ட முதலாவது வழங்குகைத் தேதிக்கு ஆகக்குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னரேனும் நிதி அமைச்சினதும் அலுவலகத்தினதும் வலைத்தளங்களில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் வெளியீட்டுத் தேதியிலிருந்து சுழற்சி அடிப்படையில் குறைந்தபட்சம் மூன்று பஞ்சாங்க மாதங்களை மேவுதலும் வேண்டும்.

(3) அமைச்சரின் விதப்புரையின்மீதும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடனும் அரசாங்கத் தனிசுப் பிணையங்கள் உள்நாட்டுச் சந்தையில் சந்தை அடிப்படைசாராப் பொறிமுறைகள் என்ற வகையாக வழங்கப்படலாம்.

அரசாங்கத்தினால் நேரடியான கடன்பெறுகை

**17.** அமைச்சர், அலுவலகத்தின் விதப்புரையின் மீதும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீதும், கடன் உடன்படிக்கைகளினூடாக அல்லது மேலதிகப்பற்றினால் முற்பணங்களைப் பெற்றுக்கொள்வதன்மூலம் வங்கிகளிடமிருந்து, வேறு நிதிநிறுவனங்களிடமிருந்து, வெளிநாட்டு அரசாங்கக் கடன்கொடுநர்களிடமிருந்து அல்லது வேறெவரேனுமாளிடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து கடன்பெறலாம்.

பொறுப்பு முகாமைத்துவத் தொழிற்பாடுகள்

**18.** (1) அமைச்சர் அல்லது அரசாங்கத்தின் சார்பில் அமைச்சரினால் எழுத்தில் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாள், 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கும் மூலோபாயத்துக்கும் இணங்க, பின்வருவன உட்பட பொறுப்பு முகாமைத்துவத் தொழிற்பாடுகளைப் பொறுப்பேற்கலாம்:-

(அ) பயனுள்ள பொதுத் தனிசு முகாமைத்துவ நோக்கத்துக்காக அவ்வாறு செய்தல் புத்திசாதுரியமானதெனக் கருதி, அரசாங்கத்தின் தனிசு அலுவல்துறையில் உள்ளடக்கப்பட்ட நிதிசார் ஆபத்துகளுக்கெதிராகப் பாதுகாப்புகளாகப் பயன்படுத்தப்பட்ட வட்டிவீதமும் நாணய உடன்படிக்கைகளும் மற்றும் வேறு மூலாதாரப் பிணையங்களும்;

(ஆ) அரசாங்கத் தனிசுப் பிணையங்களின் மீள்வாங்குகைகளும் பரிமாற்றங்களும்; அத்துடன்

(இ) ஒரு கடனின் முதிர்வுத்தேதிக்குமுன்னர் அதன் முற்கூட்டிய மீள்கொடுப்பனவை முனைதல்.

(2) பொறுப்பு முகாமைத்துவத் தொழிற்பாடுகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள், வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தில் விதிக்கப்பட்ட ஏதேனும் முழுமொத்த அல்லது தேறிய வழங்குகை எல்லைக்கு அமைந்ததாதலாகாது என்பதுடன் அரசிறைப் பொறுப்பும் பொது நிதிசார் முகாமைத்துவமும்பற்றிய இயைபான சட்டவாக்கத்தைப் பின்பற்றி, தனிசுக் குறைப்புக் குறிக்கோளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

பாகம் IV

### அரசாங்கக் கடன் உத்தரவாதங்கள், அரசாங்கம் கடனாகப் பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுத்தல், வழங்குநரின் கடன் உடன்படிக்கைகள் மற்றும் நிதிக்குத்தகை உடன்படிக்கைகள்

*அரசாங்கக் கடன் உத்தரவாதங்கள்*

**19.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஒரு மாகாணசபையின், உள்ளூரதிகாரசபையின், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியின் அல்லது வேறேதேனும் உருவகத்தின் கடப்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்தின் சார்பில் கடன் உத்தரவாதக் கட்டணங்களின் சேகரிப்புட்பட, அமைச்சர், கடன் உத்தரவாதங்களின் வழங்குகைக்காகவும் முகாமைத்துவத்துக்காகவும் தனி அதிகாரம் கொண்டவராதல் வேண்டும்:

ஆயின், அமைச்சர், அத்தகைய கடன் உத்தரவாதங்களை வழங்கும்போது பின்வருவனவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) கடன் ஆபத்து மதிப்பீடொன்றின் அடிப்படையில் கடன்பெறுநர் ஏதேனும் நிதிசார் சிரமத்தைக் கொண்டிருப்பதில்லையென்றும்;

(ஆ) கடன் உத்தரவாதம், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குக் கருதப்படுகின்றதென்றும்; அத்துடன்

(இ) கடன் உத்தரவாதம், அரசிறைப் பொறுப்பு மற்றும் பொது நிதிசார் முகாமைத்துவம்பற்றிய இயைபான எழுத்திலான சட்டம் தொடர்பாகத் தனிசுக் குறைப்புக் குறிக்கோளுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டுமென்றும்.

(2) மாகாணசபைகள், உள்ளூரதிகாரசபைகள் அல்லது அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தவிர்ந்த வேறேதேனும் உருவகத்தின் கடப்பாடுகள் தொடர்பில் கடன் உத்தரவாதங்களை வழங்குதல் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு மேலும் அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

(3) கடன் ஆபத்து மதிப்பீட்டின் அடிப்படையில் கடன்பெறுநர் நிதிசார் சிரமத்திலுள்ளாரெனக் கருதப்படுமிடத்து, உத்தரவாத மானது வழங்கப்படுதலாகாது.

(4) கடன் உத்தரவாதமொன்றின் வழங்குகையை அங்கீகாரத் துக்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்குமுன்னர், அலுவலகமானது, அத்தகைய உத்தரவாதத்திலிருந்து அரசாங்கத்துக்கான கடன் ஆபத்தை மதிப்பீடுசெய்தலும் விலைகுறித்தலும் வேண்டு மென்பதுடன் உத்தரவாதக் கட்டணங்களுட்பட ஆபத்துத் தணிப்புப் பொறிமுறையை விதந்துரைத்தலும் வேண்டும்.

(5) ஆபத்து மதிப்பீட்டின் பெறுபேறும், மதிப்பீட்டில் பயன் படுத்தப்பட்ட முறையும், உத்தேசிக்கப்பட்ட ஆபத்துத் தணிப்புப் பொறிமுறையும் அமைச்சரவைக்கு அதன் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) ஒவ்வொரு கடன் உத்தரவாதமும், கடன்பெறுநரினால் நிறை வேற்றப்பட்ட இயைபான சட்ட ஆவணப்படுத்துகையினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் இது, உத்தர வாதத்தின்கீழ் செலுத்தப்பட்ட ஏதேனும் தொகை கோரப்படின், விதித்துரைக்கப்படக்கூடியவாறான வட்டியுடன் அதனை மீளச்செலுத்துவதற்கும் அலுவலகத்தினால் கோரப்பட்ட ஏதேனும் தகவலை முழுமையாக வெளிவிடுவதற்கும் உடன்படுகின்ற ஏற்பாடுகளை மற்றவற்றுக்கிடையே உள்ளடக்கும்.

(7) கடன்பெறுநர் கடன் உத்தரவாத உடன்படிக்கையின்கீழான அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அசட்டையாகவிருக்கும் அல்லது தவறும் பட்சத்தில், அமைச்சர், அத்தகைய கடன் உத்தரவாத உடன்படிக்கையின்கீழ் அரசாங்கத்துக்குச் சேர்மதியான ஏதேனும் பணத்தைக் கடன்பெறுநரிடமிருந்து அறவிடுவதற்கு அவசியமான ஏதேனும் நடவடிக்கையைப் பின்தொடர்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுத்தல்

**20.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சர், ஒரு மாகாணசபை, உள்ளூரதிகாரசபை, அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி அல்லது வேறேதேனும் உருவகத்துக்கு அரசாங்க நிதிகளைக் கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுப்பதற்குத் தனி அதிகாரம் கொண்டவராதல் வேண்டும்:

ஆயின், அமைச்சர், அத்தகைய அரசாங்க நிதிகளைக் கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுக்கும்போது பின்வருவனவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) கடன் ஆபத்து மதிப்பீடொன்றின் அடிப்படையில் கடன்பெறுநர் ஏதேனும் நிதிசார் சிரமத்தைக் கொண்டிருப்பதில்லை; அத்துடன்

(ஆ) கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுத்தல் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குக் கருதப்படுகின்றதென்றும்.

(2) மாகாணசபைகள், உள்ளூரதிகாரசபைகள் அல்லது அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தவிர்ந்த வேறேதேனும் உருவகத்தின் கடப்பாடுகள் தொடர்பில் கடனாகப்பெற்ற நிதிகளிலிருந்து கடன்கொடுத்தலானது பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு மேலும் அமையவிருத்தல் வேண்டும்.

(3) கடன்பெறுநர் நிதிசார் சிரமத்தில் உள்ளாரெனக் கருதப்படுமிடத்து, கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன் கொடுக்கும் கொடுக்கல்வாங்கல் இடம்பெறுதலாகாது.

(4) கடனாகப்பெற்ற அரசாங்க நிதிகளிலிருந்து கடன் கொடுத்தலை அமைச்சரவைக்கு அதன் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்குமுன்னர், அலுவலகமானது, அத்தகைய கடனை வழங்குவதில் அரசாங்கத்துக்கான கடன் ஆபத்தை மதிப்பீடு செய்தலும் விலைகுறித்தலும் வேண்டுமென்பதுடன் அரசாங்கத்துக்கு நிதியளித்தல் ஆகுசெலவு, ஏதேனும் நாணய ஆபத்து மற்றும் கடன் ஆபத்து என்பவற்றை மேவுவதற்கு வட்டிவீதத்தின் மட்டத்தை விதந்துரைத்தலும் வேண்டும்.

(5) ஆபத்து மதிப்பீட்டின் பெறுபேறு, மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட முறை மற்றும் உத்தேசிக்கப்பட்ட வட்டிவீதம் என்பன அமைச்சரவைக்கு அதன் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) அரசாங்கத்துக்கான நிதியளிப்பு ஆகுசெலவு, நாணய ஆபத்து மற்றும் கடன் ஆபத்து என்பவற்றை மேவுகின்றதும் அலுவலகத்தின் விதப்புரையின் மீது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுகின்றவாறானதுமான வீதத்தில் கடன்பெறுநர் வட்டியொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(7) கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன் கொடுக்கும் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் கடன்பெறுநரினால் நிறைவேற்றப் பட்ட இயைபான சட்ட ஆவணப்படுத்துகையினால் ஆதாரப் படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் உரிய தேதிகளில் அதன் தனிசுக் கடப்பாடுகளுக்குச் சேவையளிப்பதற்கான உடன் படிக்கையொன்றையும் கடன்பெறுநர் எவையேனும் கொடுப்பனவுக் கடப்பாடுகளுக்கு மதிப்பளிப்பதற்கு அசட்டையாகவிருக்கும் அல்லது தவறும் பட்சத்தில், தண்ட வட்டி பற்றிய வாசகமொன்றுட்பட்ட வேறு நியதிநிபந்தனைகளையும் உள்ளடக்குதலும் வேண்டும்.

*அரசாங்கத்தினால் செய்து கொள்ளப்பட்ட வழங்குநரின் கடன் உடன்படிக்கைகள்*

**21.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சர் அரசாங்கத்தின் சார்பில் மூலதனப் பண்டங்களைப் பெறுவதற்காக அல்லது பொது முதலீட்டுக் கருத்திட்டங்களை நிர்மாணிப்பதற்காக அல்லது பேணுவதற்காக ஒரு வழங்குநரின் கடன் உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்குத் தனி அதிகாரமுடையவராதல் வேண்டும்.

(2) அலுவலகத்தின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற வழங்குநரின் கடன் உடன்படிக்கைகள் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும். அத்தகைய உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுமுன்னர், அத்தகைய உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதில் அரசாங்கத்தினால் உறப்பட்ட ஆகுசெலவை அலுவலகம் மதிப்பீடுசெய்தல் வேண்டும் என்பதுடன் விதப்புரையை அமைச்சருக்கு அல்லது அமைச்சரினால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அனுப்புதலும் வேண்டும்.

**22.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சர் அரசாங்கத்தின் சார்பில் நிதிக்குத்தகை உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்குத் தனி அதிகாரம் உடையவராதல் வேண்டும்.

*அரசாங்கத்தினால் செய்து கொள்ளப்பட்ட நிதிக்குத்தகை உடன் படிக்கைகள்*

(2) அலுவலகத்தின் நோக்கெல்லையின்கீழ் வருகின்ற நிதிக் குத்தகை உடன்படிக்கைகளும் அத்தகைய உடன்படிக்கைகளின் படிவமும், நியதிகளும், காலஎல்லையும் விதித்துரைக்கப்பட்ட வாறாகவிருத்தல் வேண்டும். அத்தகைய உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுமுன்னர், அலுவலகமானது, அரசாங்கத்திற்கான அவற்றின் ஆகுசெலவை மதிப்பீடுசெய்தலும் விதப்புரையை அமைச்சருக்கு அல்லது அமைச்சரினால் விசேடமாக அதிகார மளிக்கப்பட்ட ஆளுக்கு அனுப்புதலும் வேண்டும்.

பாகம் V

## பொதுத் தனிசு மற்றும் நிதி ஒழுங்கேற்பாடுகள் பற்றிய பதிவேடுகளும் வெளியீடும்

**23.** (1) அலுவலகமானது, பின்வருவனபற்றி உரியநேரத்தி லான, எல்லாமடக்கிய மற்றும் செம்மையான தரவுகளும் தகவல்களும் பற்றிய பதிவேடுகளைத் தோதான தரவுத்தள மொன்றில் பேணுதல் வேண்டும்:-

*பொதுத் தனிசு மற்றும் நிதி ஒழுங்கேற் பாடுகள் பற்றிய பதிவேடுகள்*

(அ) நிலுவையாகவுள்ள பொதுத் தனிசு;

(ஆ) வழங்குநரின் கடன் உடன்படிக்கைகள்;

(இ) நிதிக்குத்தகை உடன்படிக்கைகள்;

(ஈ) மூலாதாரப் பிணையக் கொடுக்கல்வாங்கல்கள்;

(உ) கடன் உத்தரவாதங்கள்; அத்துடன்

(ஊ) கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுக்கும் தொழிற்பாடுகள்.

(2) இப்பிரிவின் கீழான பணிகளை நிறைவேற்றுகையில், அலுவலகமானது, நிலுவையாகவுள்ள கடன் உத்தரவாதங்கள் மற்றும் கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுத்தல், கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுத்தலின்கீழ் வருகின்ற கடன் நிறுவனங்கள் மற்றும் உத்தரவாதமளிக்கப்படாத தனிசு என்பன சம்பந்தமான தரவுகளையும் தகவல்களையும் இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தகவல்களையும் 2 ஆம் பிரிவின்கீழான உருவகங்களிட மிருந்து கோருவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பொதுத் தனிசு மற்றும் நிதி ஒழுங்கேற் பாடுகள் பற்றிய வெளியீடு

**24.** அலுவலகமானது, ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்த திலிருந்து அறுபது நாட்களுக்குப் பிந்தாமல், மற்றவற்றுக்கிடையே, பின்வருவனபற்றிச் செம்மையான, உரியநேரத்திலான தகவல்களை வழங்குகின்றதும் பொதுத் தனிசுமீதானதுமான ஒரு காலாண்டுப் புள்ளிவிபரஞ்சார் தனிசுச் செய்தித்திரட்டைத் தயாரித்தலும் வெளியிடுதலும் வேண்டும்:-

(அ) கூட்டுமொத்தத் தனிசுக் கையிருப்பு, தனிசு ஓட்டங்கள், தனிசுச் சேவை ஆகுசெலவு, மீட்புத் தோற்றுருவம் மற்றும் ஒரு தனிசு அலுவல்துறையின் ஆபத்து வழிமுறைகள் அத்துடன் அரசாங்கத்தின் ஏதேனும் புதிய கடன்பெறுகை;

(ஆ) மூலாதாரப் பிணையங்களின் விபரங்கள்;

(இ) கடன் உத்தரவாதங்களின் விபரங்கள்;

(ஈ) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூரதிகாரசபைகளின் உத்தரவாதமளிக்கப்படாத தனிசுக் கையிருப்பின் கூட்டுமொத்தம்;

(உ) 20 ஆம் பிரிவின்கீழ் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுக்கும் வசதிகள் பற்றிய விபரங்கள்;

(ஊ) 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அரசாங்கத்தினால் செய்துகொள்ளப்பட்ட வழங்குநரின் கடன் உடன்படிக்கைகள் பற்றிய விபரங்கள்;

(எ) 22 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அரசாங்கத்தினால் செய்துகொள்ளப்பட்ட நிதிக்குத்தகை உடன்படிக்கைகள் பற்றிய விபரங்கள்; அத்துடன்

(ஏ) 14 ஆம் பிரிவின்கீழ் பணக்கொள்கைக் குறிக்கோளின் நடைமுறைப்படுத்துகைக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துக்காகத் தனிசுப் பிணையங்களின் வழங்குகைகளினது நிலுவையாகவுள்ள பெறுமதிகள்.

பாகம் VI

**பாராளுமன்றத்துக்கு வருடாந்தம் அறிக்கையிடுதல்**

*பாராளுமன்றத்துக்கு அலுவலகத்தின் வருடாந்த அறிக்கை*

**25.** (1) அலுவலகமானது, அரசாங்கக் கடன்பெறுகைகள் மற்றும் வேறு தனிசு முகாமைத்துவத் தொழிற்பாடுகள், நிலுவையாகவுள்ள பொதுத் தனிசு, உத்தரவாதங்கள் மற்றும் கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுக்கும் செயற்பாடுகள் அத்துடன் முன்னைய நிதியாண்டின்போது செய்துகொள்ளப்பட்ட வேறு நிதி ஒழுங்கேற்பாடுகள் என்பனபற்றி ஒவ்வோராண்டிற்கும் வருடாந்த அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) வருடாந்த அறிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) 11 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட மூலோபாயத்தின் மீதான தகவல்கள் அத்துடன் அதன் நியாயமான தன்மை;

(ஆ) மூலோபாயத்தினதும் கடன்பெறுகைத் திட்டத்தினதும் பங்களிப்பும், 3 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்டவாறு தனிசு முகாமைத்துவக் குறிக்கோள்களை எய்துவதில் அவற்றின் நிறைவேற்றுகையும் தகவல்கள்மீதான எவையேனும் விலகுதல்களுக்கான நியாயமானதன்மையும்;

(இ) கடன்கொடுநரின் வகை மற்றும் சாதனத்தின்மூலம் உட்பட முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் தனிசுச் செலவீடுகளும் தொடர்புபட்ட தனிசுச் சேவைகளும்;

(ஈ) தொகையுட்பட, மாகாணசபைகள், உள்ளூரதிகாரசபைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அத்துடன் வேறேதேனும் உருவகத்துக்கு வழங்கப்பட்ட, அரசாங்கத்தின் நிலுவையாகவுள்ள கடன் உத்தரவாதங்களின் நிரலொன்று;

(உ) நிலுவையாகவுள்ள தொகைகளுட்பட கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடனாகக்கொடுக்கப்பட்ட கடன்களின் நிரலொன்று;

(ஊ) அலுவலகத்தின் நோக்கெல்லையினீ கீழ் வருகின்ற நிலுவையாகவுள்ள வழங்குநரின் கடன் உடன்படிக்கைகளினதும் நிதிக்குத்தகை உடன்படிக்கைகளினதும் நிதிசார் நியதிகளுட்பட அவ்வொப்பந்தங்கள்;

(எ) அரசாங்கத்தின் ஏதேனும் தனிசுச் சேவை நிலுவைகள் மீதான தகவல்கள்; அத்துடன்

(ஏ) பொதுத் தனிசு முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட வேறெவையேனும் தகவல்கள்.

(3) அமைச்சர், வரைவு வருடாந்த அறிக்கையைப் பரிசீலனை செய்தல் வேண்டுமென்பதுடன் அதனை அமைச்சரவைக்கு அதன் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்தலும் வேண்டும்; அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த அறிக்கையை முற்போந்த நிதியாண்டின் முடிவை அடுத்துப்பின்வரும் நூற்றியெண்பது நாட்களுக்குப் பிந்தாமல் பாராளுமன்றத்தின்முன்னர் இடுதலும் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த அறிக்கையை நிதியமைச்சினதும் அலுவலகத்தினதும் அலுவலகமுறையான வலைத்தளங்களில் வெளியிடுதலும் வேண்டும்.

பாகம் VII

### அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் கடன் பெறப்படுதலும் உத்தரவாதங்கள் வழங்கப்படுதலும் மற்றும் மாகாணசபைகள், உள்ளூரதிகாரசபைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் அறிக்கையிடப் படுதலும்

*அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கும் அவற்றினாலும் கடன்பெறப் படுதலும் உத்தரவாதங்களின் வழங்குகையும்*

**26.** (1) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியொன்றினால் வெளிநாட்டு நாணயத்தில் குறித்தளிக்கப்பட்ட தனிசுப் பிணையங்களின் ஏதேனும் பொது வழங்குகையும் நிதிகளின் ஏதேனும் திரட்டுகையும், அரசிறைப் பொறுப்பு மற்றும் பொது நிதிசார் முகாமைத்துவம் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தைப் பின்பற்றித் தனிசுக் குறைப்புக் குறிக்கோளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன் அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரம் அதற்குத் தேவைப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரின் அங்கீகாரம், தனிசுக் குறைப்புக் குறிக்கோள், தற்போதைய மற்றும் எதிர்நோக்கப்பட்ட அரசிறை, நிதிசார் மற்றும் தனிசுச் சூழல் என்பவற்றின் அடிப்படையில் உத்தேசிக்கப்பட்ட தனிசின் மதிப்பீடொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். மதிப்பீட்டுக்கான கட்டளைக் கற்கள், நடவடிக்கைமுறை மற்றும் மதிப்பீட்டுடன் சம்பந்தப்பட்ட அத்தகைய வேறு கருமங்கள் விதித்துரைக்கப்பட்டவாறாக இருக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தனிசுப் பிணையங்களின் பொது வழங்குகைக்காகவும் நிதிகளைத் திரட்டுவதற்காகவும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், திட்டமிடப்பட்ட இக்கடன் பெறுகைகளுள் ஒவ்வொன்றுக்காகவும் எல்லா நியதி நிபந்தனைகளையும் கடன்பெறுகை இடம்பெற்றுள்ளபின்னர் தனிசு ஒப்பந்தத்தின் பிரதியொன்றையும் அலுவலகத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) அரசுக்குச் சொந்தமானவொரு தொழில்முயற்சிக்கும் அதனாலும் உத்தரவாதங்களின் ஏதேனும் வழங்குகைக்கு அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரம் தேவைப்படுதல் வேண்டும்.

*அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் அறிக்கையிடும் தேவைப் பாடுகள்*

**27.** அரசுக்குச் சொந்தமானவொரு தொழில்முயற்சி, ஒவ்வொரு காலாண்டினதும் முடிவுக்குப்பின்னர் நாற்பத்தைந்து நாட்களுக்குப் பிந்தாமல் அதன் நிலுவையாகவுள்ள தனிசுபற்றிய பதிவேடொன்றை அலுவலகத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் 23 ஆம் பிரிவின்கீழான கோரிக்கையின்மேல் அது குறித்துரைக்கக்கூடியவாறாக உத்தரவாதமளிக்கப்படாத தனிசு உட்பட அதன் மொத்த நிலுவையாகவுள்ள தனிசுபற்றிய அத்தகைய தகவல்களையும் தரவுகளையும் அலுவலகத்துக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

*மாகாண சபைகளினதும் உள்ளூரதிகார சபைகளினதும் அறிக்கையிடும் தேவைப்பாடுகள்*

**28.** ஒவ்வொரு மாகாணசபையும் உள்ளூரதிகாரசபையும் ஒவ்வொரு காலாண்டினதும் முடிவுக்குப்பின்னர் நாற்பத்தைந்து நாட்களுக்குப் பிந்தாமல், நிலுவையாகவுள்ள உத்தரவாதமளிக்கப்படாத தனிசு உட்பட அதன் நிலுவையாகவுள்ள தனிசுபற்றிய பதிவேடொன்றை அலுவலகத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## பாகம் VIII

### தவறுகளும் தண்டங்களும்

*தகவல்களை வழங்குவதற்கான கடப்பாடு*

**29.** (1) இரண்டாம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒவ்வோர் உருவகமும், அலுவலகத்தினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள்ளும் படிவத்திலும் இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களை அலுவலகத்துக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) இரண்டாம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உருவகமொன்றினது தத்துவங்களின் பிரயோகம், கடமைகளின் நிறைவேற்றுகை மற்றும் பணிகளின் புரிகை அவ்வுருவகத்தின் எந்தப் பகிரங்க அலுவலருக்கு அல்லது எந்த ஆளுகின்ற குழுவொன்றுக்குக் குறித்தளிக்கப்படுகின்றனவோ மற்றும் (1) ஆம் உட்பிரிவின்கீழ்

தகவல்களைக் கொடுத்துதவுவதற்கு எந்தப் பகிரங்க அலுவலர் அல்லது எந்த ஆளுகின்ற குழுவொன்று தேவைப்படுத்தப்படுகின்றாரோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ–

(அ) இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின் கீழ் அளிக்கப்படுவதற்கு அல்லது செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும்போது ஏதேனும் கூற்றுக்காக, வெளிப்படுத்துகைக்காக அல்லது தகவலுக்காக ஏதேனும் பொய்யான அல்லது பிழை வழியுய்க்கும் கூற்றை அளிக்கின்ற அல்லது வெளிப்படுத்துகையைச் செய்கின்ற அல்லது ஏதேனும் பிழைவழியுய்க்கும் தகவலைக் கொடுக்கின்ற;

(ஆ) அலுவலகத்தின் பணிகளையும் கடமைகளையும் எதிர்க்கின்ற அல்லது அவற்றுக்கு முட்டுக்கட்டையிடுகின்ற; அல்லது

(இ) அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டாலொழிய, குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஏதேனும் தகவலை, ஆவணத்தை, அறிக்கையை அல்லது விடயத்தைக் கொடுத்துதவத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற,

அந்த உருவகத்தின் அந்தப் பகிரங்க அலுவலர் அல்லது ஆளுகின்ற குழு தவறொன்றைப் புரிகின்றார் அல்லது தவறொன்றைப் புரிகின்றது என்பதுடன் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் அல்லது பொறுப்பாதலும் வேண்டும்.

*சந்தைக் கூருணர்வுத் தகவல்களைப் பாதுகாத்தல்*

**30.** (1) அரசாங்கத் தனிசுப் பிணையங்களின் வழங்குகை, இடுகை அல்லது மீள்கொள்வனவுடன் தொடர்புபட்ட நிருவாகச் செயல்கள், ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அல்லது ஆவணப்படுத்துகையில் அடங்கியுள்ள தகவல்களை வெளிக்காட்டுதலானது இழப்புக்களை அல்லது அரசாங்கத்தின்

நலன்களுக்குச் சாதகமற்ற நிலைமைகளைத் தோற்றுவிக்கக் கூடியதாகவிருக்கும்போது, இடுகை மற்றும் மீள்கொள்வனவின் விடயத்தில் ஏலவிற்பனைக்கு அல்லது முறையான கொடுக்கல் வாங்கலுக்கு முன்னரான தகவல் சந்தையில் வழங்கப்படும்வரை, முறையான நிருவாகச் செயல்கள், ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அல்லது ஆவணப்படுத்துகை இரகசியமானவையாக வெளிப் படுத்தப்பட்டு அலுவலகத்தினால் ஒதுக்கிவைக்கப்படலாம். அதன்பின்னர் உடனடியாக, எல்லாத் தகவல்களும் வெளியிடப் படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நடைமுறைப்படுத்துகையில் சம்பந்தப்படுகின்றவரும், அந்தரங்கத் தன்மையானவையாக அல்லது அந்தரங்கத் தன்மையானவையென நியாயமானமுறை யில் சந்தேகிக்கப்படவேண்டியவையாக உள்ள உட்கருதப்பட்ட செயற்பாடுகள் அல்லது பொதுத் தனிசுத் தொழிற்பாடுகள் பற்றிய தகவல்கள் பற்றி அதன்மூலம் அறியவருகின்றவரும் அல்லது அவற்றுக்கான அணுக்கத்தையுடையவருமான எவரேனும் ஆள், உட்கருதப்பட்ட செயற்பாடுகள் அல்லது பொதுத் தனிசுத் தொழிற்பாடுகளுக்குமுன்னர் சட்டக் கடப்பாடொன்று அத்தகைய தகவல்களின் தொடர்பாடலைத் தேவைப்படுத்தவேண்டிய அளவுவரைதவிர, அத்தகைய தகவல்களின் அந்தரங்கத் தன்மையைப் பேணுவதற்குக் கடப்பாடுடையவராகவுள்ளார்.

(3) ஓராம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் IX

### பொது

**31.** (1) அமைச்சர், வழங்கும் முகவர்களையும், செய்முறை முகவர்களையும், வேறு முகவர்களையும் நியமிப்பது உசிதமான தென அவர் கருதுகின்றவிடத்து அவ்வாறு செய்யலாம் என்பதுடன் அலுவலகமானது விதித்துரைக்கப்படக்கூடியவாறாக அத்தகைய முகவரை ஒழுங்குபடுத்துவதற்கு, மேற்பார்வைசெய்வதற்கு மற்றும் கண்காணிப்பதற்கு அதிகாரங்கொண்டதாதலும் வேண்டும்.

முகவர்களை நியமிப்பதற்கும் நிபுணர்களை வாடகைக் கமர்த்து வதற்குமான தத்துவம்

ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இவ்வுட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தத்துவம், எவையேனும் சட்டப்பிணக்குகள் வேறேதேனும் நாட்டில் விளங்கப்பட்டுத் தீர்த்துவைக்கப்படக்கூடிய பட்சத்தில், செய்முறை முகவர்களின் நியமனத்தை உள்ளடக்கும்.

(2) அரசாங்கத் தனிசுப் பிணையங்களில் முதனிலை மற்றும் இரண்டாந்நிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப் படுத்துவதற்கு அமைச்சர், மத்திய வங்கியின் விதப்புரையுடன் முதனிலை வியாபாரிகளை நியமித்தல் வேண்டும்.

(3) முதனிலை வியாபாரிகளை நியமித்தலானது, அலுவலகம் தோதானதெனக் கருதக்கூடியவாறாக அத்தகைய நியதி நிபந்தனை களுக்கு அல்லது மட்டுப்பாடுகளுக்கு அமைந்ததாதல் வேண்டு மென்பதுடன் பின்வருவனவற்றை உள்ளடக்குதலும் வேண்டும்:-

(அ) உருவகத்தின் நிதிநிலைமை;

(ஆ) உருவகத்தின் அனுபவங்களும் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் கடமைகளைப் புரிவதற்கான இயலுமாந்தன்மையும்;

(இ) சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளுக்கு உருவகத்தின் இணங்கியொழுகுகை; அத்துடன்

(ஈ) பொதுமக்கள் நலன்.

(4) (417 ஆம் அத்தியாயமான) உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் மற்றும் (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட முதனிலை வியாபாரிகள் இச்சட்டத்தின்கீழ் முதனிலை வியாபாரிகளாகத் தொடர்ந்திருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தோராதலும் வேண்டும்.

(5) (அ) இரண்டாம் உட்பிரிவின்கீழும், (417 ஆம் அத்தியாயமான) உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழும் (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழும் நியமிக்கப்பட்ட முதனிலை வியாபாரிகளை ஒழுங்குபடுத்துவதற்கும், மேற்பார்வைசெய்வதற்கும், கண்காணிப்பதற்குமான தத்துவம் மத்திய வங்கிக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) (417 ஆம் அத்தியாயமான) உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின்கீழும் (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழும் ஒரு முதனிலை வியாபாரியினால் புரியப்பட்ட அல்லது புரியப்படக்கூடிய தவறுகள், அந்தந்தக் கட்டளைச்சட்டங்களின்கீழ் விளங்கப்படுதலும் அவைதொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கையெடுக்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் அக்கட்டளைச்சட்டங்களின்கீழ் குறித்துரைக்கப்பட்ட அதே தண்டனைக்கு அமைந்தனவாதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய தவறுகளுக்காக நிறைவேற்றப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படும் ஏதேனும் புலனாய்வும், பரிசோதனையும் அல்லது தொடுக்கப்பட்ட அல்லது தொடுக்கப்பட வேண்டிய ஏதேனும் துடர்ச்சி, வழக்கு அல்லது வழக்காடலும், அந்தந்தக் கட்டளைச்சட்டங்களின் ஏற்பாடுகளின்கீழ், விடயத்துக்கேற்ப, நிறைவேற்றப்படுதலும், கேட்கப்படுதலும் அல்லது முடிவுறுத்தப்படுதலும் வேண்டும்.

(6) ஒரு முதனிலை வியாபாரியாக அதன் கடமைகளைப் புரிவதனைப் பொருட்படுத்தாது, ஒரு முதனிலை வியாபாரியாக அதன் நியமனத்தை இல்லாதாக்குவதற்கான அல்லது இடைநிறுத்துவதற்கான ஓர் ஏதுவாக அமையக்கூடிய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளுக்கு முதனிலை வியாபாரிகள் இணங்கியொழுகாமைபற்றி மத்திய வங்கியானது அமைச்சருக்கு அறிவித்தல் வேண்டும்.

(7) முதனிலை வியாபாரிகளின் நியமன நோக்கத்துக்காகவும், இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட முதனிலை வியாபாரிகளினால் கடைப்பிடிக்கப்படவேண்டிய நிபந்தனைகளுக்காகவும், அவர்களின் சிறப்புரிமைகளுக்காகவும், அவர்களினால் புரியப்படவேண்டிய கடமைகளுக்காகவும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(8) (417 ஆம் அத்தியாயமான) உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின்கீழும் (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழும் நியமிக்கப்பட்ட முதனிலை வியாபாரிகள் தொடர்பிலானவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையும் அமைச்சரினால் அல்லது மத்திய வங்கியினால் அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அலுவலரினால் ஆக்கப்பட்டவையுமான எல்லா விதிகளும், ஒழுங்குவிதிகளும், பணிப்புகளும், தீர்மானங்களும், கட்டளைகளும், அங்கீகாரங்களும் அல்லது மறுப்புக்களும், அறிவித் தல்களும், சுற்றறிக்கைகளும், தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும், நடத்தைக்கோவையும் அல்லது வேறேதேனும் எழுத்திலான தொடர்பாடலும் நடைமுறையில் தொடர்ந்திருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட முதனிலை வியாபாரிகளுக்கு ஏற்புடையற்பாலனவாதலும் வேண்டும்; அத்துடன்

(9) அமைச்சர், இச்சட்டத்தின்கீழ் அவரது பணிகளைத் தகுந்த முறையிலும் பயனுள்ளவகையிலும் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய உயர்தொழிலர்களையும், ஆலோசகர்களையும், நிபுணர்களையும் உடன்பட்டுக்கொள்ளப்படவேண்டிய அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது வாடகைக்கமர்த்தலாம், அல்லது அவர்களின் சேவைகளைத் தக்கவைத்துக்கொள்ளலாம்:

ஆயின், அந்நியமனங்களின் ஆகுசெலவு ஏதேனுமிருப்பின் அதுவும் உயர் தொழிலர்களையும் ஆலோசகர்களையும் நிபுணர்களையும் வாடகைக்கமர்த்துவதற்கான ஆகுசெலவும், இயைபான ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளினுள் இருத்தல் வேண்டும்.

(10) அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், இயைபான எழுத்திலான சட்டத்துக்கிணங்கத் தற்காலிகத் தொகுதிச் சான்றிதழ் பிணையங்களை இலத்திரனியல்ரீதியில் வழங்குவதற்கும், அத்தகைய பிணையங்களின் வைத்திருக்கை களைத் தேக்கி வைப்பதற்கும், அவற்றிலான சொத்தாண்மையையும் அக்கறைகளையும் பதிவதற்கும், அத்தகைய பிணையங்களில் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்த்து வைப்பதற்கும் பிணையங்கள் வைப்பக முறைமையொன்றைப் பெயர்குறித்தல் வேண்டும்:

ஆயின், அத்தகைய பெயர்குறித்தல் செய்யப்படும்வரை, அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பிணையங்களுக்காக இயைபான சட்டங்களின்கீழ் மத்திய வங்கியினால் தாபிக்கப்பட்டுப் பேணப்பட்ட பதிவகம், நடைமுறையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

கையளிப்ப தற்கான தத்துவம்

**32.** அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகள், ஒதுக்குகள் மற்றும் மட்டுப்பாடுகளுக் கமைய, விடயத்துக்கேற்ப, திறைசேரிச் செயலாளருக்கு, திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு அல்லது அலுவலகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, 35 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒழுங்கு விதிகளை ஆக்குவதற்கான அவரது தத்துவம்தவிர அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கும், ஒழுங்குகளுக்கும், மட்டுப்பாடுகளுக்கும் அமைய கையளிக்கலாம்.

அதிகாரமளிக்கப் படாத கொடுக்கல் வாங்கல்களின் விளைவுகளும் அவற்றைத் தவிர்க்கும் விதமும்

**33.** அரசாங்கமானது, அமைச்சர் அல்லது அமைச்சரினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட பகிரங்க அலுவலர் தவிர்ந்த வேறெவரினாலும் அதற்காக அல்லது அதன்சார்பில் வழங்கப்பட்ட அல்லது செய்துகொள்ளப்பட்டதாக அல்லது வழங்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் கடன் உடன்படிக்கையின்,

நிதிக்குத்தகை உடன்படிக்கையின், வழங்குநரின் கடன் உடன்படிக்கையின், மூலாதாரப் பிணையத்தின் அல்லது ஏதேனும் உத்தரவாதத்தின் நியதிகளினால் பிணிக்கப் படுதலாகாது.

வழக்கிலிருந்தான பாதுகாப்பு

**34.** அலுவலகத்தின் சார்பில், விடயத்துக்கேற்ப, திறைசேரிச் செயலாளரினால், அலுவலகத்தின் பணிப்பாளர் தலைமை யதிபதியினால் அல்லது எவரேனும் ஊழியரினால் அல்லது குழுவின் எவரேனும் உறுப்பினரினால் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் என்பனவற்றைப் பின்பற்றியும் அதன்போதும் இச்சட்டத்தின்கீழ் அவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயலுக்காக, அவர் நல்லெண்ணத்துடன் செயலாற்றினாரென்றும் உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும், நியாயமான கவனத்தையும், திறனையும் பிரயோகித்தாரென்றும் எண்பித்தால், அவருக்கெதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

ஒழுங்கு விதிகள்

**35.** (1) அமைச்சர், குழுவின் விதப்புரையின்மீது, இச்சட்டத்தின் குறிக்கோள்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுப்பதற்கென, விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப் படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அல்லது அவைதொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவது அவசியமாகவுள்ள கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள் பாராளுமன்றத்தின்முன்னர் அதன் அங்கீகாரத்துக்காகக் கொணரப்படுதலும் வேண்டும். அத்தகைய ஒழுங்குவிதிகள், அவை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதன்மேல் அல்லது பாராளுமன்றத்தினாற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அடுத்துப்பின்னரான தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் ஒழுங்குவிதிக்கு எத்தேதியன்று அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்டதோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறு எழுத்திலான சட்டத்திலும் மேலோங்கி நிற்றல்

**36.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் பயனுடையதாதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க இச்சட்டத்தினதும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கிநிற்றலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுமையை வரையறுக்காமல், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், கடன்பெறுதலும், அரசாங்கத் தனிசுப் பிணையங்களை வழங்குதலும், கடன் உத்தரவாதங்கள், வழங்குநர்களின் கடன் உடன்படிக்கைகள் மற்றும் நிதிக்குத்தகை உடன் படிக்கைகள் அத்துடன் அரசாங்கத் தனிசுப் பிணையங்களில் முதனிலை மற்றும் இரண்டாந்நிலைச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு முதனிலை வியாபாரிகளின் நியமனம் என்பன தொடர்பில் அமைச்சருக்குள்ள அதிகாரம் தொடர்பாக மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அலுவலகத்தைத் தொழில் மயமாக்குவதற்கு இடைக்கால ஒழுங்கேற்பாடு

**37.** இரண்டாயிரத்து இருபத்திமூன்றாமாண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 132 ஆம் பிரிவின் ஏற்புடையதாந்தன்மை, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினெட்டு மாத காலப்பகுதியினுள், அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப் படும் கட்டளைமூலம் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்:

ஆயின், இப்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அலுவலகமானது, இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் பணிகளையும் புரியலாம்.

பேணல்கள்

**38.** நியமிக்கப்பட்ட தேதிக்குமுன்னர் செய்துகொள்ளப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எவையேனும் அரசாங்கத் தனிசுப் பிணையங்கள், கடன் உடன்படிக்கை, நிதிக்குத்தகை உடன்படிக்கை, வழங்குநர் கடன் உடன்படிக்கை, மூலாதாரப் பிணையம் அல்லது ஏதேனும் உத்தரவாதம், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின்கீழ் செய்துகொள்ளப்பட்டதெனக் கருதப்படுதல் வேண்டும்.

ஏலவேயுள்ள கடன்பெறுகைச் சாதனங்களின் ஏற்புடைமைக்கான ஒழுங்கேற்பாடுகள்

**39.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய-

''வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஆவணம்'' என்பது, பின்வருவனவற்றைக் கொண்டுள்ளதும் பொது நிதிசார் முகாமைத்துவத்துக்கான இயைபான சட்டவாக்கங்களைப் பின்பற்றித் தயாரிக்கப்பட்டதுமான ஆவணம் என்று பொருளாகும்:-

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவங்களில் செலவினம் பற்றிய மதிப்பீடுகள்; அத்துடன்

(ஆ) மற்றவற்றுக்கிடையே, செலவினம் பற்றிய மதிப்பீடுகள் மற்றும் கடன்பெறும் உச்சவரம்புகள் என்பனவற்றை உள்ளடக்குகின்ற ஒதுக்கீட்டுச் சட்டமூலம்;

''வேறேதேனும் உருவகம்'' என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதும் அரசாங்கக் கடன் உத்தரவாதங்களை அல்லது கடனாகப்பெற்ற பணத்திலிருந்து கடன்கொடுத்த நிதிகளைப் பெறுவதற்குப் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஏதேனும் உருவகம் என்று பொருளாகும்;

"கடன்பெறுதல்" என்பது, கடன் உடன்படிக்கைகளைச் செய்தல், வர்த்தக வங்கிகளிலிருந்து முற்பணங்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தனிசுப் பிணையங்களை வழங்குதல் என்பனமூலம் நிதிகளைத் திரட்டுவதற்கான நடவடிக்கைமுறைகள் என்று பொருளாகும் அத்துடன் "கடன்பெறுதல்" என்பது, அதற்கிணங்கப் பொருளமைத் துக்கொள்ளப்படுதல் வேண்டும்;

"மத்திய வங்கி" என்பது, 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்;

"தனிசு" என்பது, பின்வருவனவற்றினால் உருவாக்கப்பட்ட எல்லா நிதிசார் பொறுப்புக்களையும் உள்ளடக்கும்:-

(i) கடன்பெறுதல்;

(ii) வழங்குநரின் கடன் உடன்படிக்கைகளையும் நிதிக்குத்தகை உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளுதல்;

(iii) கடன்பெறுகையல்லாத வேறேதேனும் நோக்கத்துக்காகத் தனிசுப் பிணையங்களின் வழங்குகைகள்; அத்துடன்

(iv) கோரப்பட்டுள்ள உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்களின்கீழ் கொடுப்பனவுக் கடப்பாடுகளின் ஏற்றல்கள்;

"அரசாங்கத்தின் தனிசு" என்பது, 2 ஆம் பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளின்கீழான நிறுவனங்களினால் தனிசின்மூலம் உருவாக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் திரட்டப்பட்ட தனிசு என்று பொருளாகும்;

"தனிசுப் பிணையங்கள்" என்பது, பெயர்குறிக்கப்பட்ட ஆட்களுக்கு அல்லது காவுநர் சாதனங்களாக இலத்திரனியல் (அருவமாக்கப்பட்ட) வடிவத்தில் அல்லது பத்திர வடிவத்தில் வழங்கப்பட்ட பிணையங்கள் என்று பொருளாகும் என்பதுடன் கைமாற்றத்தக்கனவாகவும் அல்லது கைமாற்றத்தகாதனவாகவும் இருக்கலாம். இது, திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும், வாக்குறுதிப்பத்திரங்களையும், சான்றிதழ்களையும், தாள்களையும், வர்த்தகப் பத்திரங்களையும், அல்லது பொதுமக்களிடமிருந்து எந்த வேறெவையேனும் ஒத்த சாதனங்களின்மூலம் பணம் திரட்டப்படுகின்றதோ அந்த வேறெவையேனும் ஒத்த சாதனங்களையும் உள்ளடக்கும்;

"மூலாதாரப் பிணையங்கள்" என்பது, அரசாங்கத் தனிசு அலுவல்துறையில் உள்ளடக்கப்பட்ட நிதிசார் ஆபத்துக்கெதிரான பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப் பட்ட சாதனங்கள் என்று பொருளாகும் என்பதுடன் வட்டி மற்றும் நாணய உடன்படிக்கைகள் அல்லது அத்தகைய ஒத்த சாதனங்கள் என்பவற்றையும் உள்ளடக்கலாம்;

"நிதிக்குத்தகை உடன்படிக்கைகள்" என்பது, ஒரு நீண்டகால நிதிசார் ஒழுங்கேற்பாடு என்று பொருளாகும்; இதன்மூலம் சொத்தின் பயன்படுத்துநர் (குத்தகைபெறுநர்) குத்தகைக்குவிடப்பட்ட சொத்தின் முழு ஆகுசெலவையும் மேவுகின்ற (குத்தகைகொடுநரின் நிதிசார் ஆகுசெலவுகளும் இலாப விளிம்பொன்றும் உட்பட) அச்சொத்தின் கொள்வனையாளருக்கு அல்லது சொந்தக்காரருக்கு (குத்தகைகொடுநர்) தொடர்ச்சியான வாடகைகளை அல்லது தவணைப்பணங்களைச் செலுத்துவதுடன் குத்தகையின் முடிவில் நிர்ணயிக்கப் பட்டவொரு விலைக்குச் சொத்தைக் கொள்ளுதல் செய்வதற்கான விருப்புத்தெரிவையும் கொண்டுள்ளார்;

"நிதியாண்டு" என்பது, பஞ்சாங்க ஆண்டு என்று பொருளாகும்;

"அரசாங்கம்" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் என்று பொருளாகும்;

"உத்தரவாதம்" என்பது, குறித்தசில குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின்கீழ் வேறொரு சட்ட ஆளின் அல்லது உருவகத்தின் செய்துகொள்ளப்பட்ட கடப்பாடுகளின் நிறைவேற்றுகைக்கு உத்தரவாதமளிப்பவரென்ற முறையில் அரசாங்கத்தினாலானவொரு தெளிவான பொறுப்பேற்றல் என்று பொருளாகும்;

"கடன் உத்தரவாதம்" என்பது, உத்தரவாதமளிப்பவர் என்ற முறையில் அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட கடனின் நியதிகளின்கீழ் கடன்பெறுநரின் கொடுப்பனவுக் கடப்பாடுகளுக்கு மதிப்பளிப்பதற்குப் பொறுப்பேற் கின்றவிடத்தான ஓர் உத்தரவாதம் என்று பொருளாகும்;

''உள்ளூரதிகாரசபைகள்'' என்பது, எல்லா மாநகரசபைகளும், நகரசபைகளும், பிரதேசசபைகளும் என்று பொருளாகும்;

''அமைச்சர்'' என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின் கீழ் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

''விதித்துரைக்கப்பட்ட'' என்பது, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்;

''பொதுத் தனிசு'' என்பது, தனிசினால் உருவாக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பந்திகள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) என்பவற்றிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உருவகங்களின் தனிசு என்று பொருளாகும்;

''வெளிநாட்டு அரசாங்கக் கடன்கொடுநர்கள்'' என்பது, ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்களாகவுள்ள எந்த வெளிநாட்டு அரசாங்கங்களுடன் இலங்கை இராஜதந்திர மற்றும் வியாபாரத் தொடர்புகளை அல்லது இருபுடை உடன்படிக்கைகளைக் கொண்டுள்ளதோ அந்த அரசாங்கங்கள் என்று பொருளாகும்;

''விசேட செலவிடும் அலகு'' என்பது, இயைபான ஒதுக்கீட்டுச் சட்டத்தில் செலவினத் தலைப்பொன்று கொடுக்கப் பட்டுள்ள ஓர் அமைச்சு, திணைக்களம், மாவட்டச் செயலகம் அல்லது ஒரு மாகாணசபை தவிர்ந்த ஓர் உருவகம் என்று பொருளாகும்;

''அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்'' என்பது, இலங்கை மத்திய வங்கியும், அவற்றின் தொழிலின் பாகம் அல்லது முழுமையும் கடன்கொடுப்பதாக அல்லது கடன்பெறுவதாக உள்ள காப்புறுதி மற்றும் குத்தகைக் கம்பெனிகள் உட்பட்ட நிதிநிறுவனங்களும் தவிர, பின்வருவனவாகவுள்ளவை என்று பொருளாகும்:-

(i) அரசியலமைப்பின் கருத்துக்குட்பட்ட ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம்;

(ii) அரசானது அதன் பங்குவைத்திருக்கையின் பயனைக்கொண்டு, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு தொழிற்படுத்தப்பட்ட எந்த உருவகங்களில் நேரடிக் கட்டுப்படுகின்ற அக்கறையைக் கொண்டுள்ளதோ அந்த உருவகங்கள்;

(iii) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத் துக்குச் சொந்தமான தொழிற்பொறுப்பு முயற்சிகளைப் பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றுதல் சட்டத்தின் கீழ் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசுக்குச் சொந்தமான தொழிற் பொறுப்புமுயற்சிகளைப் பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றுதல் சட்டத்தின் அல்லது அத்தகைய வேறு சட்டங்களின் நியதிகளின்படி மாற்றப்பட்ட அரசுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனங்கள்; இதன் நியதிகளின்படி ஏதேனும் தொழில் உருவகம் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது;

''நியதிச்சட்டமுறையான நிதியங்கள்'' என்பது, அங்கீகரிக்கப்பட்ட முடிவுறுத்தல் நிதியங்கள் தவிர, குறிப்பிட்டவொரு நோக்கத்துக்காக ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் பகிரங்க நிதிகள் குறித்தொதுக்கப்படும் ஏதேனும் நிதியம் என்று பொருளாகும்; ஊழியர்களினால் அவற்றுக்கு உதவுதொகைகள் செலுத்தப்படும் சிக்கன, சேமிப்பு அல்லது கட்டிடச் சங்கத்தை அல்லது சேமநல நிதியத்தை அல்லது இயைபான எழுத்திலான சட்டத்தின் கீழ் ஊழியர்களின் சேவைகள் முடிவுறுவதன் மீது அவர்களுக்குப் பணிக்கொடைகளைச் செலுத்தும் நோக்கத்துக்காகப் பேணப்பட்ட ஏதேனும் பணிக்கொடை நிதியத்தை இது உள்ளடக்கும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல*

**40.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*